**சுருக்கம்**

பள்ளிக்கல்வி – பொது நூலகங்கள் – 2017–18–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள் – “மதுரை மாவட்டத்தில் நாட்டுப்புறக்கலைகள் சார்ந்த சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக்கூடம்” அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வி (பொ.நூ.1)த்துறை**

**அரசாணை (நிலை) எண்.74** | **நாள் 23.04.2018**

**திருவள்ளுவராண்டு, 2049**
**விளம்பி வருடம், சித்திரை– 10**

**படிக்கப்பட்டவை:–**

பொது நூலக இயக்குநரின் கடித ந.க.எண்.5894/உ1/2017, நாள் 20.02.2018 மற்றும் 10.04.2018

~*~~*~

**ஆணை:–**

2017–18–ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

> “தமிழகத்தின் பல்வேறு நகரங்களில் தனித்தன்மை வாய்ந்த பொருள் சார்ந்த நூலகங்கள் மற்றும் காட்சிக்கூடங்கள் அமைக்கப்படும். சிந்து சமவெளி நாகரிகம் உள்ளிட்ட பழம்பெரும் நாகரிகங்கள் குறித்த சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக்கூடம் சிவகங்கை மாவட்டம் கீழடியிலும், தமிழிசை, நடனம் மற்றும் நுண்கலைகள் குறித்து தஞ்சாவூரிலும், நாட்டுப்புறக் கலைகள் சார்ந்து மதுரையிலும், தமிழ் மருத்துவம் சார்ந்து திருநெல்வேலியிலும், பழங்குடியினர் பண்பாடு சார்ந்து நீலகிரியிலும், கணிதம், அறிவியல் சார்ந்து திருச்சியிலும், வானியல், புதுமைக் கண்டுபிடிப்புகள் சார்ந்து கோயம்புத்தூரிலும், அச்சுக்கலை சார்ந்து சென்னையிலும் இவை அமைக்கப்படும். மேற்கண்ட சிறப்பு நூலகங்கள் மற்றும் காட்சிக் கூடங்கள் ஒவ்வொன்றும் ஒரு கோடி செலவில் மொத்தம் ரூ.8 கோடி செலவில் அமைக்கப்படும்”.

2. பொது நூலக இயக்குநர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழர்களின் நாட்டுப்புறக் கலைகளான ஒயிலாட்டம், ஆலியாட்டம், கரகாட்டம், கோலாட்டம், தேவராட்டம், களியான் ஆட்டம், தெருக்கூத்து, காவடியாட்டம், சிலம்பாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், மயிலாட்டம், உறியடி விளையாட்டு, தப்பாட்டம், உக்கடிப்பாட்டு, இலாவளி, கைச்சிலம்பாட்டம், குறவன் குறத்தியாட்டம், துருவம்பாட்டம், புலி ஆட்டம் ஆகியவைகளை பாதுகாக்கும் பொருட்டு இது சார்ந்த சிறப்பு நூலகத்தினை மதுரை மாவட்ட மைய நூலக கட்டடத்தின் இரண்டாவது தளத்தில் 3000 சதுரடியில் நாட்டுப்புறக்கலைகள் சார்ந்த சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக்கூடம் அமைக்கவும், அதற்கு தேவையான உள்கட்டமைப்பு பணிகள் மற்றும் இதர செலவினங்களை கீழ்க்கண்டவாறு மேற்கொள்வதற்கான செலவினம் ரூ.35,05,661/–ஐ (ரூபாய் முப்பத்தைந்து இலட்சத்து ஐந்தாயிரத்து அறநூற்று அறுபத்து ஒன்று மட்டும்) தமிழ்நாடு பாடநூல் மற்றும்

(த.பி.பா)

கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து பெற்று மேற்கொள்ளவும் பொது நூலக இயக்குநருக்கு அனுமதி அளித்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:–

<u>காட்சிக்கூடம் அமைப்பதற்கான விவரப்பட்டியல்</u>

| வ. எண். | பணி விவரம் | தோராய மதிப்பு (ரூ.) |
|---|---|---|
| 1. | காட்சிக்கூடம் அமைப்பதற்கான கட்டடத்தின் உட்கட்டமைப்பு பணிகள் மற்றும் மின்சாரப் பணிகள் மேற்கொள்ளுதல். | 15,00,000 |
| 2. | நாட்டுப்புற கலைகள் / கலைஞர்கள் புகைப்படங்கள் வாங்குதல். | 3,75,050 |
| 3. | கணினி மற்றும் கணினி சார்ந்த உபகரணங்கள் வாங்குதல். | 1,86,797 |
| 4. | ஒளி மற்றும் ஒலி காட்சிக்கூட உபகரணங்கள் வாங்குதல். | 80,976 |
| 5. | நாட்டுபுறக்கலைகள் சார்ந்த ஆடை ஆபரணங்கள வாங்குதல். | 5,64,130 |
| 6. | காட்சிக்கூடத்திற்கான தேவையான தளவாடங்கள் வாங்குதல். (ரூ.4,23,608 + ரூ.67,850) | 4,91,458 |
| 7. | நூல்கள் வாங்குதல். | 3,07,250 |
| | மொத்தம் | **35,05,661** |
| | (ரூபாய் முப்பதைந்து இலட்சத்து ஐந்தாயிரத்து அறுநூற்று அறுபத்து ஒன்று மட்டும் | |

3. பொது நூலக இயக்குநரின் மேற்காணும் கருத்துருவினை அரசு ஆய்வு செய்து அதனை ஏற்று, மதுரை மாவட்ட மைய நூலகக் கட்டடத்தின் இரண்டாவது தளத்தில் 3000 சதுரடியில் "மதுரை மாவட்டத்தில் நாட்டுப்புறக்கலைகள் சார்ந்த சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக்கூடம்" அமைப்பதற்கும், அதற்கான செலவினத் தொகையான ரூ.35,05,661/–ஐ (ரூபாய் முப்பத்தைந்து இலட்சத்து ஐந்தாயிரத்து அறநூற்று அறுபத்து ஒன்று மட்டும்) தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து பெற்று மேற்கொள்ளவும் பொது நூலக இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.1220/கூ.த.செ.(நிதி)/2018, நாள் 12.04.2018ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (கூ.பொ), சென்னை–2.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை–6.

<u>நகல்</u>
முதன்மைச் செயலாளர்,
சிறப்புத் திட்ட அமலாக்கத்துறை, சென்னை–9.
நிதி (கல்வி–II)த்துறை, சென்னை–9.
பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதன்மைச் தனிச் செயலர், சென்னை–9.
பள்ளிக்கல்வி (வரவு செலவு)த்துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.